31402 27502

# ஸ்ரீ அரவிந்தர் காலமாதல்

அதன் உட்கருத்தும் மேல் விளைவும்

இதன் மூலம்
ஆங்கிலத்தில் K. D. சேத்னாவால் எழுதப்பட்டது

To THEE who hast been the material envelope of our Master, to THEE our infinite gratitude. Before THEE who hast done so much for us, who hast worked, struggled, suffered, hoped endured so much, before THEE who hast willed all, attempted all, prepared, achieved all for us, before THEE we bow down and implore that we may never forget, even for a moment, all we owe to THEE.

உனக்கு, எங்கள் இயமானரின் தூலப்போர்வையாக இருந்த உனக்கு, எங்கள் அளவற்ற நன்றி உரித்தாகுக. உன் முன்பு—, எங்கள் பொருட்டு இவ்வளவுஞ் செய்து, தொண்டாற்றி, உழன்று, துன்புற்று, எதிர்பார்த்து, எவ்வளவோ பொறுத்து, எல்லாவறறையும் சாதிக்க எண்ணி, முயறசித்து, தயாரித்து, அனைத்தையும் நிறைவேற்றிய உன் முன்பு, நாங்கள் தலைகுனிந்து வணங்குகிறோம். மேலும், எங்களிடத்துள்ள யாவும் நீ கொடுத்தவையே என்பதை நாங்கள் என்றும், ஒரு கணமேனும், மறவாதிருக்க இறஞ்சுகின்றோம்.

ஸ்ரீ அன்னை

அன்னேயே! நாங்கள் தரிசிக்க எழுந்த சத்தியின் உருவே.

அடியேங்கள், இம்மண்ணில் தங்களைப் பெற்றிருக்கும் புண்ணி யத்தை நினைக்குந்தோறும், வாடுறும் பயிருக்குற்ற வான்மழை போல் பேராதரவு பெறுகின்றோம்.

எங்கள் மன அழுக்கனைத்தையும் கழுவி அகற்றுந் திறமைத் தங்கள் கண்களுக் குண்டென நம்பியுள்ளோம். அண்ணல் ஸ்ரீ அரவிந்தரை இழந்த ஏக்கம், எங்களை அணுகிச் சிறிதும் துன் புறுத்த வொட்டாமல் அதிமானசப் பேரானந்தப் பெருங் கடலுக்கு எங்கள் அனைவரையும், பெற்றதாயினும் இனிய தண்ணளி காட்டி, ஒருங்கே அழைத்துச் செல்வதை இங்குற்றோர் ஒவ் வொருவரும் நன்கறிவர்.

ஆதலின் அன்னையே! தாங்கள் நீடுவாழ்க. தங்கள் மெல்லிய திருவடிகள் எங்கள் உள்ளக் கமல மலர்களில் ஊன்றி எழுமாக. வணக்கம். வணக்கம்.

*இங்ஙனம்,*

*அடியார்க்கடியன,*

**தண்டபாணி**

# முகவுரை.

ஸ்ரீ அரவிந்தர் காலமாதல் என்ற தலைப்பின்கீழ் வெளிவந்த ஆங்கிலச்சுவடியைக் கண்ணுற்ற அன்றே எழுந்த ஆர்வத்திற் கிணங்கி, எல்லாம் வல்ல எம்பிராட்டியின் ஆற்றல் நிறைந்த, யாதும் அருளவல்ல அன்னையின் கருணையானே, ஆஸ்ரமவாசி, க. அமுதன் அவர்களின் இன்றியமையாத அருந்துணைகொண்டு, பொருள் விளக்கம் பெற்று அவரும் நானுமாகக் கூடி, மொழி பெயர்த்த இந்நூல், தமிழகத்திற்கே ஓர் தண்ணமுதமாகும் என நினைக்கின்றேன்.

ஸ்ரீ அரவிந்தரும் அன்னையும் வாழ்க !
அன்னோர்தம் அடியார்கள் வாழ்க !
இதனைக் கண்ணுறும் யாவரும் உயர்க !

மேலும், இத்தகைய மொழிபெயர்ப்புகள் பலவாய்த் தமிழில் வருமாறு அன்னை அருள் வழங்குவார்களாக.

இங்ஙனம்,
தங்கள் ஆசிக்குரிய,
**த. பொ. தண்டபாணி.**

## மொழி பெயர்ப்பாளர்கள்

1) திரு. க. அமுதன் ஆஸ்ரமம், புதுவை.

2) திரு. த. பொ. தண்டபாணி
ஸ்ரீ ஜெயராஜன் பள்ளிக் கூடம், புதுவை.



15 ஆகஸ்டு, 1872 ஸ்ரீ அரவிந்தர் 5 டிஸம்பர், 1950

# ஸ்ரீ அரவிந்தர் காலமாதல்

## அதன் உட்கருத்தும் மேல் விளைவும்

திட்டமாக அவர் சரிதையை வெளியிடும் கருத்தை அறிவித்த போது ஸ்ரீ அரவிந்தர் சொன்னதாவது :

" என் வாழ்வினைப்பற்றி யாரும் எழுதுவதற்கில்லை. ஏன் எனில் மக்கள் காணத்தக்கவாறு வெளிப்படையாக அது இல்லை." இங்கிலாந்தில் பல்கலைக்கழக வாழ்வின் விளக்கமும் இந்தியாவில் இளமைப்பருவத்தில் அரசியல் சேவையின் பல தீவிர பாகங்களும் அவரைச் சிறப்பித்தன. இவை தவிர அவர் வாழ்வு உள்ளியலின் சிறப்புற்ற வெளி நிகழ்ச்சிகளால் எடுத்தியம்பற்காற்ரு வகையில், எண்ணம், போக்கு, எய்தல் இவற்றில் முற்றிலும் உண்முகம் நோக்கி இருந்தது. அதைப்பற்றிச் சிறிது தெளியவேண்டின், தொன்று தொட்டு வரும் ஆன்மநாட்ட விளக்கத்தில், மிகப்பெரிய அரியவற்றுள் நாம் கொஞ்சமேனும் தொடர்பு பெறவேண்டும். மேலும், துன்புறும் மக்கள் தொகுதிக்கே, சென்ற 40 ஆண்டுக ளாக முற்றிலுமே கொணர, ஸ்ரீ அரவிந்தர் உருமாற்றல் (ரூபாந் தரம்—Transformation) என்று சொல்லி, உழைத்து வந்த, மண்ணை உருமாற்றுகின்ற, அளவு மீறிக் கண்ணைப் பறிக் கின்ற அதிமானசம் (Supermind) என்று அவர் கூறிய புதிய ஒளியினை, நாம் உணர வேண்டும். அவரது வாழ்க்கை எவ்வாறோ அவ்வாறே உலகம் கண்டு கூறிய அவரது இறப்பின் காட்சியும் இருக்கிறது.

ஸ்ரீ அரவிந்தரின் இறப்பு ஸ்ரீ அரவிந்தரின் ஆழ்ந்த உண்முக மான வாழ்வைவிட வேறாக இருப்பதற்கில்லை.

சொல்லுக்குற்ற அவ்வளவு சாதாரண பொருளில் எந்த யோகியும் சாவதில்லே. தூல உடம்பின் விதியை என்றுமே அன்னேரின் உணர்வு கடந்து செல்லுகிறது. உடற்கூட்டில் அவர் வதியும் போதும், அதனைக்காட்டிலும் சிறப்புற்றவராகவும் அதற்கப்பாலும் உளர். எல்லேயற்றதும் நிலேத்ததும் ஆய தெய்வத்தின்கண் ஊன்றிய, முற்றுமுணர்ந்த இறவாமையான அவரது உள்ளத்திற்கு, வாழ்வும் சாவும் சிறிய வேஷங்களாம். அவரது மக்கட்பணியோ, முக்கியமாக, அவரது சுதேச்சையானதும் தாராளமானதும் ஆய உள்ளத்தினின்றும் உருவாகிறது. இன்னுங்கூறின், யோக கர்த்தனும் ஸ்ரீ அரவிந்தர் போன்ருர்க்கு " இறப்பு " எனும் வார்த்தையைப் பொருத்தமாகக் கூறுதற்கே இல்லே.

ஏன் எனில், அவரது உடலின் எற்புத்துளேதொறும் அதிமானச உருமாற்றுஞ் சத்தியானது இயங்கிற்றென்பது வெள்ளிடைமலே. மேலும் உள்ளத்து மட்டுமல்லாது ஸ்தூலமாகவும் பயன் அளித்தது என்பதற்கு நூற்றுக்கணக்கில் அவரது சீடர்கள் தங்கட்கே உற்ற நோய்க்கு ஆச்சரியமாகக் குணப்படுத்தும் ஸ்ரீ அரவிந்தரது பரிசத்திற்குச் சான்றுவர் என்பதும் வெளிப்படையாம்.

இப்பயன், அவரது ஆஸ்ரமத்தளவில் அடக்கப்படவில்லே. பல்வேறு பிணிகளுக்கு, அவை நீங்கும் சிகிச்சை நாடி, நாள்தோறும் அனுப்புவித்த முறையீடுகளின் போக்குவரவுகளேக் குறிக்கும், இந்தியா எங்குமுள்ள தந்தி நிலேயங்களே சான்றளிக்கும். வைத்திய சாத்திரங்களால் நிவர்த்திக்கமுடியாத நோய்களும் இவற்றுள் அடங்கும். அத்துடன் அவரது ஆன்ம சாதனத்தால் பரிகாரமும் குணமும் பெற்றதற்கு நன்றி செலுத்திய செய்திகளும் சான்ரும். அதுவன்றி, ஸ்ரீ அரவிந்தர் அதிமானச யோகி; சத்தின் உள்ளிலும் வெளியிலும் இறங்கி, யாவுங்கடந்த எல்லேயற்ற அமரத்துவத்துடன் ஓர் திவ்ய வாழ்வைப் புவிமீது கொணர்ந்தார். அன்னர் வயது முதிர்ச்சியாலும் உடற் காரணங்களாலும் காலமானுரெனக் கூறுவதற்கில்லே. வெறும் வயித்தியக் குறிப்பு எவ்வாருயினும் ஆகுக ; ஆனுல் தூல வாழ்வைக்காட்டிலும் விழுமிய கருத்துற்ற

தும் அளத்தற்கரிய ஆன்மப்பேறுற்றதுமான முழு உட்பொருளை அது கொண்டிருக்க வேண்டும் என்க. விநோதமாக மறையுந் தந்திர சக்திக்குப் பதிலாக ஓர் வைத்தியக்குறிப்பு இருக்கவேண்டும் என்பது ஸ்ரீ அரவிந்தரின் யோகத்துடன் முற்றிலும் ஒத்திருக்கிறது. அவரது யோகம் காலப்போக்கில் ஏற்படும் வழிமுறை வளர்ச்சிக்கென ஏற்பட்டது. தெய்வப் பண்புகளை வலிய சுமந்து மயங்குவதில் அது நாடவில்லை. ஏன் எனில் அவைகள் மனித இயல்பினை ஓரணுவேனும் இதுவரை மாற்றவில்லை. ஆனால் ஆன்மார்த்த விளக்க வளர்ச்சி, பேரியல்பினை சாதாரண இயல்பால் உட்கொளல், ஆச்சரியமாக ஆனால் விபரீதமற்ற உருமாற்றல், இப் புவிமிசை பரிணமக் கருத்திற்கு அன்னியமாகாததை ஒருவன் வாழ் நாளுள் முழு தீவிரமாக சாதித்தல் முதலியன அவரது யோகத்தின் நோக்கமாம். அதன் உட்கருத்தின் விரிவு, பொருள்களின் முறையமைப்பில் உளது. மேலும் சாதாரணமாக அவ்விரிவுக்கு யுகங்கள் பிடிக்கும். இரம விகாசமானது ஸ்ரீ அரவிந்தரின் அதி மானச யோகத்தில் புரட்சியுடன் எப்போதும் கரைந்து கலந்துளது. அவரது வாழ்க்கைத் துணிவுகளைப்போலவே, இன்னும் வசனமுங் கவியும் ஆக்கும் அவரது திறமையைப்போலவே அவரது யோகமும் எப்போதும் இனியதாகிறது. இயற்கையோடு முரண்படாது இணங்கி நிற்பதால் அவரது யோகத்தில் எளிமை பொருத்தம் ஆய இப்பண்புகள் சாலச் சிறக்கின்றன. அவ்வாறேதான் அவரது இறப்பின் துணிவும், கேவலம் இயற்கை முறைக்கு மாறானதாக இல்லை. அதற்குப் பதிலாக எல்லா உன்னத பொருளையும், மிகச் சிறந்த நடையையும் பெற்றுளது. இருப்பினும் பொதுமக்கள் மாய்ந் தொழிகின்ற அமைதியும் நிழலும் போலவே, சாதாரணமாகக் காணப் பட்டது. ஸ்ரீ அரவிந்தர் உடற் காரணங்களால் இறந்திலர். மருத்துவ அறிவு கூறமுற்படும் ஷெ காரணங்கள்கூட அவரிறப்பினை நிரூபிக்க லாற்ருது புறங்காண்கின்றன. அத்தகைய கோட்பாடு நாம் ஈண்டு கவனிக்கின், ஸ்ரீ அரவிந்தரின் சிரேட்டித்த ஆன்ம நிலையிலும் இதர பல்வேருய்ச் சிறந்த உடலோம்பற்கான விஷயங்கள்மீதும் அடிப்படையாக நிறுவப்பட்டுள்ளது. நரம்புநாடிகளைத் தட்டி எழுப்பும் மருந்துக்கு அவரது உடல் இயங்காமையால்,

மருத்துவ அறிஞர்களது எவ்வித முயற்சியும் பயன்படாத கல, மூத்திர அடைப்பின் முதிர்ந்த உபாதியால் தாக்குற, ஸ்ரீ அரவிந்தர் உடனே அவ்வுபாதி நீக்கத்திற்காக ஆன்மநிலையில் ஆழ்ந்தனர். ஆனால், ஒவ்வொரு மருத்துவர்க்கும் அவ்வாறு மூத்திர அடைப்புற்றயர்ந்தோர் மீண்டும் நனவு நிலைக்கு வரல் அரிது என்று தெரியும். இருப்பினும் அவரைக் கண்காணித்த மருத்துவர்கள் வியக்க, ஸ்ரீ அரவிந்தர், அடிக்கடி தனது கண்களைத் திறந்து பருகுவதற்கு நீர் வினவியும் நேரமென்னவென்றும் கேட்டார். இவ்வாறு தொடர்ந்து நிகழ்ந்த சம்பவம் விஞ்ஞானத்தை பொய்ப்பித்தது மட்டுமல்ல; மூத்திர அடைப்பால் ஏற்பட்ட ஆழ்ந்த மயக்கம்கூட இயமானனின் தனித்த இச்சையினை ஓர் சிறிதும் தடுக்காததும், பொதுநலத்திற்கென்றே இருந்துவந்த அவரது யாக்கை மிகவும் கிலகப்பட்டிருந்தும், இயம்புங்கால், அந்த யோகியின் அறிவோடு உள்ளடங்கி நிற்றலோடு கலந்தே இருந்தது. ஈங்கே, எரிமருந்து (Phosphorus) இரும்பு, கார்பன் காற்று ஆயவற்றின் சேர்க்கை அளவில் மட்டும் மூளை இயங்கவில்லை. அதற்கிடாகக் கடவுட் சிகரங்களில் அமர்ந்த கூர்த்த மனத்தின் தொண்டன் இருந்து சடப்பொருளுக்கு ஏற்பட்ட விதியினூடே தனது ஆணையை ஏற்கச் செய்தான். மூச்சு நிற்பதற்கும் இதயத்துடிப்பு ஒடுங்குவதற்கும் அரை மணி நேர முன்புங்கூட, தமது கண்ணோட்டமும் அமைதியுங் கூடிய கண்களைத் திறந்து பார்த்தார். தனதருகுற்ற மருத்துவரின் பெயரைக்கூறினர் ; மேலும் சிறிது நீரும் பருகினர். மருத்துவ சரிதையில் மூத்திர அடைப்பாலாய உணர்வுத் தடையில் நிகழும் இது, மிகவும் வியக்கத்தக்கதே.

யோகிகளுக்கெல்லாம் யோகியாம் இவரது காலமாதலின் சிறந்த தன்மை அவ்வளவில் நிற்கவில்லை. மூத்திரப்பைகளால் அகற்றப்பட வேண்டிய உடலிலுள்ள விஷங்கள், உதரத்தோடு கலந்து தோய்ந்து உடலெங்குமே பரவியதென அறுதியிட்டு எழுதப்படும் ஓர் மருத்துவ சோதனையில் சிறிது நேரத்திற்குள் அந்த தேகம் நிறம் மாறும் ; கருமை படர்ந்து அழுக ஆரம்பிக்கும். ஆனால் ஸ்ரீ அரவிந்தரின் உடலோ, மரணக் குறிப்புத்

தாள் கை எழுத்தாகி, இந்தோ-பிரெஞ்சு மருத்துவர்கள் கூடி, ஆலோசனையிலிருந்தபோது இரண்டரை நாளாகியும் அவர் உயிரோடிருந்தபோது சிறப்பித்த அதே வெண்-பொன்னிற அழகினைப் பெற்றிருக்கக் காணப்பட்டது. அழுகற் குறிக்குற்ற எதுவும் ஓர் சிறிதும் ஏற்படவில்லை. திசம்பர் மாதம் 5 ஆம் தேதி காலை மணி 1-26 க்கு நீத்த அந்தத் தருவாயில் எவ்வாறு அவ் வெண்-பொன்மேனி இருந்ததோ அவ்வாறே 41 மணிநேரத்திற் கப்பாலும் விளங்கிற்று. எனவே நியாயப்படி ஆகவேண்டிய சமாதி செய்தலை அளவற்று ஒத்திவைத்திருப்பதாக வெளிவந்த ஸ்ரீ அன்னையின் சீரிய அறிக்கை அறிவித்தது. அதாவது " ஸ்ரீ அரவிந்தரின் சமாதி இன்று நிகழவில்லை. அவரது உடல் நுண்ணிய அதிமானச ஒளித்திரளால் தாக்குற்றிருக்கிறது. அழுகிப் போக யாதோர் குறியுமில்லை. அவரது படுக்கையிலேயே, அவ்வுடல் நல்ல நிலையிலிருக்கும் வரையில் வைக்கப்பட்டிருக்கும்." என்பதே. அமைதியின் வெற்றி விளக்கத்தின் கண்ணே அது நல்ல நிலையில் சில நாட்கள் கிடந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் அதை தரிசித்தனர். திசம்பர் மாதம் 9ம் தேதி மாலை மணி 5 க்கு நூக்கமரப்பெட்டியில் வெள்ளியும் பட்டும் அணி செய்ய, யாதோர் மரபும் மதமும் சேர்ந்த சடங்கின்றி அடக்கம் செய்து ஆசிரம வெளிமுற்ற நடுவில் அதற்கென்றே அகழ்ந்தெடுத்த நிலவறையில் வைக்கப்பட்டது. மரப்பெட்டியில் உடலை வைத்தபோதுங்கூட உண்மையில் உடலழிவோ துர்நாற்றமோ கிடையாது. இருப்பினும் விந்தையுடன் காத்துவந்த ஒளி விலக ஆரம்பமாயிற்றென்ற அறிகுறிகள் தோன்றின. அவ்வொளி 90 மணிநேரங்கள் தங்கியிருந்ததெனக் கூறலாம். இக்கணக்குக் கீழ்த்திசையில், இறந்த உடல் சீதோஷ்ண நிலைகளால் சேதமுறுது இருக்குமெனக் கூறிய(Lyons) இலாயன்ஸ் அவர்களின் ஜூரிஸ்புருடன்ஸில் கண்ட நேரத்தினும் இரு மடங்குக்கு மேலும் இருந்தது. உயிர்க்கிறுதிக்கென மாறுந் தருவாயிலும் அதற்குப்பிறகும் இறப்பின் நெருக்கத்திலும், சடப்பொருள்மீது ஓர் நிகரற்ற எஜமானத்துவமே நிலவிற்று. எனவே ஸ்ரீ அரவிந்தருக்கே அதிக அளவில் உரிமையான அதிமானசத்தின் உருமாற்றும் ஆற்றல், மறுக்கப்படாத அளவில் நிரூபிக்கப்பட்டது.

சுருங்கக் கூறின், அதிமானச ஒளியைப்பற்றி ஓர் அளவு அறிந்த போதுதான் அவரே வேணுமென்றே தனதிச்சையாக எடுத்துக் கொண்ட மிகப்பெரும் போராட்ட முடிவின் சாராம்சமாகவே அன்னாரின் காலமான நிகழ்ச்சியும், முற்றிலும் அமையக்காணல் பொருத்தமாக இருக்கும்.

ஆனால் இங்கே ஒரு கேள்வி பிறக்கிறது. போராட்டம் வேணுமென்றே இருந்திருப்பின் வரப்போவதைப்பற்றி ஏதாவது அவர் அறிவித்தாரா ? ஆம். சீடர்களுக்கு அவர் எழுதும் அவரது பெரிய, விளக்கந்தருங் கடிதங்கள் இன்னுங் குறைந்தபாடில்லை ; அவரைப்பற்றிய நகைச்சுவையினையும் மறந்தார்களில்லை. எனவே அவ்வகை ஒளியின் ஓட்டமும் பரப்பும், உலகப்போக்கினைக் காணும் விரிவான நோக்கமும் நீங்கவில்லை என்பது மிகவும் உண்மை உடைத்தாய் இருக்கிறது. சென்ற 2 ஆண்டுகளாகவே தனது எதிர்காலத் திட்டங்கள்மீது வாளா இருந்தார். மேலும் தனது சொந்த ஆன்மார்த்த வேலையில் வரவர உள்ளாழ்ந்தார். அத்துடன் இலக்கிய உற்பத்தியில், முக்கியமாக பண்டைக் காதையும் உருவகமும் ஆன ஸாவித்திரி என்ற வீரத்தாற் சிறந்த பெருங் காவியத்தில் ஈடுபட்டார். எனினும் வாளாமையிலும் அகத்தோய்விலும் சில குறிகள் இலங்கின. அவைகள், அவரது பணி நிறைவேறுவதற்குள் வரப்போகும் பெருங்கேட்டினை ஒருக்கால் அவர் சந்திக்க நேருமோ என்ற குறிப்பையுங் காட்டின.

சென்ற நவம்பரில் ஓர் நாள் கூர்ஜர சோதிடர் ஒருவரால் எழுதப்பட்ட எதிர்காலக் குறிப்புகள் வாசிக்கப்பட்டன. அவற்றுள் 1950, 1964 ஆய ஆண்டுகளே முக்கியம் பெற்றன. சோதிடர் எழுதியவையாவன: " 1950 ல் சூரியனுஞ் சந்திரனுஞ் சேர்வதாலும் பன்னிரண்டாம் வீட்டுக்குச் சந்திரனே அதிபதியாகலானும் ஸ்ரீ அரவிந்தரின் தன்னிழப்புக்கு வாய்ப்பு இருக்கிறது ", என்பவையே. 1964 ஆம் ஆண்டினைப்பற்றி அவர் கருதியவை :— " அந்த ஆண்டில் ஸ்ரீ அரவிந்தரின் ஆற்றல் நிறைந்த சில சக்திகள் காணப்படும். 93 வயதாகித் தனது வாழ்வின் தொண்டுகளை

முடித்துக்கொண்டு உலகினின்றும் தனதிச்சைப்படி அவர் விலகுவார்." என்பனவே. இதனைச் செவியுற்றதும் ஸ்ரீஅரவிந்தர் தனது கரத்தை உயர்த்திச் சிறிது வேடிக்கையாகக் கூறியதாவது:—"தொண்ணூற்று மூன்று ? " என்பது. தனது வந்த வேலைப் பேறுகள் முடிய அவ்வயதினை மிக்கு சேய்மைப்பட்டிருப்பதாகக் கருதினார்கள் போலும் ! 1950 ஆம் ஆண்டினைப்பற்றி ஓர் சீடர் 12 வருடத்திற்கோர் முறை ஸ்ரீ அரவிந்தரின் வாழ்க்கையில் முக்கிய சம்பவங்கள் நிகழ்ந்து வருவதால் 1950 ஆம் ஆண்டும் ஓர் முக்கிய ஆண்டாகவே இருக்கவேண்டுமெனக் கூறினார். ஸ்ரீ அரவிந்தரின் ஆன்ம வாழ்விற்கே 1926 ஆம் வருடம் ஓர் தலைசிறந்த அடையாளமாக இருந்தது. ஒளி நிறைந்த அன்னையின் தலைமையில் ஆஸ்ரம ஆரம்பத்தினை அறிவிப்பதோடு வெற்றியின் உறுதிப்பாட்டினையும் அறிவிக்கும் ஆண்டாக அது இருக்கிறது.

*12 வருடங்கள் கழிய, 1938* ஆம் ஆண்டில் ஸ்ரீ அரவிந்தர் விழுந்து தொடை எலும்பு முறிய அதனால் உடலுக்குற்ற ஆபத்தினின்றும் விலகிக்கொண்டார். தன்னிழப்பைக் குறிப்பாக எடுத்துக்காட்டும் 1950 ஆம் ஆண்டும், 12 வருடங்களுக்குப்பிறகு தான் வருகிறது. மேலும் சோதிடர் ஸ்ரீ அரவிந்தரின் வாழ்க்கையில் 93 ஆம் வயதினையே ஓர் நினைவாண்டாக விசேடித்துக்கூறினும், ஸ்ரீ அரவிந்தர் அக்கூற்றினை அறவே வெறுஞ் சொல் அளவில் கருதினவர்களாகத் தென்படவில்லை. "அச்சோதிடருக்கு உண்மையில் ஏதோ ஓர் பாகம் எட்டியுள்ளது " என ஸ்ரீ அரவிந்தர் சொன்னார்." இந்த ஆண்டில் உங்களுடைய ஆன்ம இழப்பைப் பற்றிக் கூறும் அச்சோதிடம் வீண்சொல் அல்லவா ?" என்றும் " எப்படியும் நீங்கள் எங்களை விட்டகலப்போவதில்லை " எனவும் ஸ்ரீ அரவிந்தரைக் கேட்டபோது, அவசரப்படாத தனது மேன்மை தோய்ந்தவாறே " ஏன் ?" என்ற ஓர் ஒப்பற்ற மர்ம வார்த்தை அமைதியுடன் அவரிடமிருந்து மறு வினாவாக எழுந்தது. நாளடைவில் அதிகப்பட்டு இறங்கும் அதிமானசத்தின் பயனாக இதுவரையில் கண்டிராத அளவுக்கு ஸ்ரீ அரவிந்தர் நீண்டகாலம் வாழக்கூடும் என்று அவர்கள் எதிர்பார்த்தமையால் இம்மொழி அங்குற்ற அனை

வர்க்கும் மிகவும் திடுக்குற்றதாக இருந்தது. மற்ருேர் பிறப்பில், சொல்லொணு வகையில், வரப்போகும் இன்பத்தின் எச்சரிக்கை நிறைந்திருந்தது. அவரது அறையில் வேலே செய்தவர்களுக்கும் அவரைக் கவனித்து வந்தவர்களுக்கும் தனது சொந்த தயவினைத் திடீரென வழங்கினர். ஸ்ரீ அரவிந்தர் தனது உள்ளக்கிடக்கை யினை முற்றும் வெளிப்படுத்தும் இயல்பிலர். எங்கும் பரவிய வானம்போன்று மிக நுட்பமான அன்பினை உடையவர். அவரது அளவுகடந்த அருளானது தாம் எடுத்துக்கொண்ட தொண்டா லும் இடுக்கண் காலத்துத் தன் சீடர்களுக்குத் தாம் எழுதிய கடி தங்களாலும் விளக்கமுறுகிறது. தாதைக்கேற்றவாறு காணத் தக்க வழியில் அவரது அன்பு கலந்த வாய்ச்சொற்கள் அரியவை களாகவே இருந்தன. ஆயினும், ஈண்டு கொஞ்ச நாட்களாகத் தன்னைக் கவனித்தவர்கள் ஒவ்வொருவரிடத்தும், நேர்ந்தபோது தனது வாஞ்சையின் திட்டமான புறத்தோற்றம் சென்றது. அது எவ்வாறு இருந்ததென்ருல் அவர்களின் நற்பணியினை தாம் காலந்தாழ்த்தாது வேளையோடு அறிந்திருப்பதுபோலத் தோன் றிற்று. அம்முகஜாடை அளவற்று இனித்தும், வரவேற்கத்தக்க வாறு இருந்ததேனும், அது ஒரு வேளை விலக இருக்கும் மிகக் கூரிய துயரைத் தெளிவில்லாமல் தாங்கி நிற்பதாகவுந் தோன் றிற்று.

நூல் மூலமோ அல்லது கடித மூலமோ ஸ்ரீ அரவிந்தர் கூறு பவற்றை எழுதுந் தொண்டாற்றிய சீடர்க் காதில் ஓர் குறிப்பு அறைகுறையாகப் பட்டது என்ற ஓர் எதிர்பாராத செய்தியும் மூன்ருவதாக எழுதப்படலாம். இயமானராம் ஸ்ரீ அரவிந்தர் " ஸாவித்திரி" என்ற சரிதை சார்பாக சில ஆண்டுகளாகவே ஈடுபட் டிருந்தார். அதில் தாம் வெகுகால முன்பே எழுதிய பாடத்தைச் செப்பனிட்டும், அடிக்கடி அரிய கருத்துகளைச் சேர்த்தும், உட்கருத் தினை இன்னும் பல்கால் விளக்கமுறச் செய்தும் கதையினைச் செறிவுபடுத்தியும், உருவகங்களை விவகரித்தும், சத்துச்சித்தாய வற்ருேடு தாம் உறவாடி அங்குள்ள அதிமானசத் தலங்களின் காட்சியினை மிகமிகத் தீவிரமாகக் கைப்பற்றியும், கடவுளர்களைப்

பற்றிய இயக்கங்களைக் கூறும் விரிவான சந்தங்களோடு தாம் அன்யோன்யமாகி அவைகளுக்கு முன்னினும் இனிய சிலிர்ப்பினை சுவாசித்தும் மகிழ்ந்து வந்தார். அளத்தற்கரிய மோனத்திலாழ்ந்து வேதவாக்கியங்களையும் பொன்மொழிகளையும் அவர் வழங்குவர். பெருவாரியாகக் காலஞ் செல்கிறதே எனக் கருதாமல், காத்திருப்பர். மறைவான கற்பனையின் ஒளி நிறைந்த உட்செறிவுகளை வாரி வீசுதலுடனும் தானே விளங்கும் வர்ணனையுடனும் அவர் செல்வர். வரிசை அல்லது முற்றுக்குறிகள் எவ்வளவு சிறியதாயினும் அவற்றைத் திருத்தும் அல்லது விரிக்கும் கண்ணோடு விரைந்து திரும்புவர். மீண்டும் பலதிறத்த சர்வ ஜாக்கிரதையுடன் கூடிய ஆர்வத்தோடு முனைவர். உலகச் செயல்களுடன் அரக்கர்கள், அசுரர்கள், தேவர்கள் உள்ள, புலப்படாத உலகங்களின் செயல்களைச் சேர்த்துத் தங்கள் சமுதாய எண்ணம் வாழ்வாதியவற்றை விரிவுபடுத்தும் இராமாயண-மகாபாரத கர்த்தாக்களின் விசேட மனப்பான்மைக் கிணங்க, ஸ்ரீ அரவிந்தர் தமது கனத்த தொகுப்புகளில் பழைமை தோய்ந்த மனப்பான்மையுடன் மகிழ்ந்து நினைந்து ஐஸ்வரிய நோக்குடனும் அமைதியாகவும் நிகழ்த்திய பணியின் பயனே ஸாவித்திரியாகும். வானத்தை அளாவும் தன்மையுற்றதே ஸ்ரீஅரவிந்தரின் நூலாம்.மேலும் அவர் தமது அதிமானச யோகத்தின் மகத்தான ரகசியங்களைச் சொல்லிசையாகப் பற்பல பக்கத்தும் பற்பல நிறத்தும் அமைந்த பாட்டாக இருக்க விருப்பங்கொண்டார். அந்த ஒப்புயர்வற்ற காட்சியும் இணையற்ற அநுபவமும் கூடி உறைய, ஐம்பதினாயிரம் அடிகளுக்கு மேலும் தேவைப்பட்டன. மிகப்பெருங் காட்சியினையும் அநுபவத்தையும் ஒத்த பொறுமையே ஸ்ரீ அரவிந்தர் கையாண்ட மகா காவியத்தைப் பல்காலும் சிறப்பித்தது. அப்போது ஈடுபட்டிருந்த அம்மகாகாவியங்கூட பதினோராம் முறை அல்லது பன்னிரண்டாம் முறையாகும். மகாகாவியத்தின் முக்கிய அங்கத்தைக் குறித்து அவர் அமைதியாக அடியிற் கண்டவாறு கூறியபோது நேரம் அவர்பால் அளவற்றிருப்பதாகக் காணப்பட்டது.

“ மர்மமானதும் ஆற்றலுற்றதுமான நடனத்தில் நிகழ்வது

போல மாசற்றப் பேரின்ப அர்ச்சகி ஒருத்தி உண்மையை வெளிப் படுத்தும் சிதாகாசத்தினின்றும், தூண்டியவண்ணமாகத் தெய் வங்களின் வருகையை அறிவிக்கும் உளக் குகையில் ஏதோ ஓர் மூலேயில் அசைகின்றுள். ஆனந்தக் கரங்கள் மத்தியில் அமைதி யாம் இதயமாயினள். செழிப்பாக இசைந்தொலிக்குந் தாளத்தில் வாழ்ந்தனள். மறைக்கப்பட்ட தெய்வத்தன்மைக்கோர் மாடம் போலவும், அல்லது மறுமைப் பொருள்களுக்குற்ற பொற்கோவிற் கதவு போலவுமான உபமானக்கதையை ஒத்த வைகைறையை உடம்பாகக் கொண்டனள்."

இருப்பினும், திடீரெனத் திசம்பர் மீ 5 ந் தேதி ஏற்பட்டக் கொடிய சம்பவத்திற்கு முன் இரண்டு மாதங்களாகவே ஸ்ரீ அர விந்தர்," நான் ஸாவித்திரியை விரைந்து முடிக்கவேண்டும் "எனக் கூறித் தனது எழுத்தாளரைத் திடுக்கிடச் செய்தார்.

உண்மையில், இவை எல்லாம் அவர் அகல இருந்த விருப் பத்தினேயோ அல்லது காலமாகும் அதே தேதியினேயோ திட்ட மாகக் குறிக்கா. ஆனுல், தாம் ஈடுபட்டிருந்த கடும் போராட்டமும் அது முடிவுற்ற அந்த நாளும் கூடிய சீக்கிரம் அவருக்கு ஏற்பட லாம் என்றிருந்த கருத்தும் ஏற்கனவே அவருக்கு விளங்கின. மிகப் பொருத்தமான உருவகத்துடன் ஸாவித்திரியைப்பற்றிய சில விஷயங்களும் ஒத்திருக்கின்றன.

தனது மகாக்காவியத்தினே விரைவாக முடிக்க அவர் முயன் றும், கொஞ்சங் குறைவாகவே முடிவுற்றது. ஓர் முடிவுரையுடன் அது பன்னிரு நூல்களாக அமையத் திட்டமிடப்பட்டது. குறைந்த பட்சம், ஒருவாறு, முதன்முதலாக முடிவுரையும் எழுதப்பட்டுவிட் டது. இன்னும் (1) தொடக்கம் (2) லோக சஞ்சாரம் (3) தெய்வத் தாய் (4) பிறப்புந் தேட்டமும் (5) வாழ்க்கை (6) காதல் (7)ஊழ் ஆய பிற நூல்கள் எழுத்தளவிலாவது அல்லது அச்சிலாவது இருக் கின்றன. பின்னுல் திருத்தஞ் செய்து மிகப்பெரிய நூலோடு சேர்க்க வேண்டி, வெகுகாலத்திற்கு முன்பே எழுதப்பட்ட ஓர் சிறியபாகத்

தைத்தவிர, எந்த உருவிலும் இல்லாத ஒரே ஒரு நூல் மட்டும் ''இறப்பு'' நூலாக எஞ்சிற்று. அத்தொகைநூல் உண்மையில், தான் கடுங்காலனோடு நேருக்குநேர் மல்யுத்தம் செய்யும்வரை முடிக்க முடியாமல் இருந்தது. மேலும் ஸ்ரீ அரவிந்தர்கூட அம்மகா காவியத்தைத் தொடங்குமுன், தனது தேகத்திற்கு ஏற்படும் கொடிய கண்டத்திற்காகக் காத்திருந்தனர் போன்றுமிருந்தது. இவ்வுண்மைக்கே மேற்கூறிய செய்தியும் சூசனையாயிற்று.

என்று முள்ளதும் பொலிவுற்றதுமான ஆன்மாவால் ஓய் விலாதுழைத்து உருவாக்கப்பட்டதோடு, பலதிறன்களும் புகழும் வாய்ந்த உடற்கருவிக்குத் தன் கண்ணெதிரே நிகழ்ந்து காயம் பலவுந் தந்து, தனக்கே இறுதியை உறுத்திடக் கடும்போர் நடந் தது. தாராளமாய் அங்கீகரிக்கப்பட்ட, பயங்கரமான நிச்சயமற்ற சூதாட்டமாகவும், ஏற்கனவே ஸ்திரப்படுத்தப்பட்டு, மேற்கொண்ட கொடிய சோதனையாகவும், உலகில் தெய்வீக வாழ்வோம்பிய இவருக்கு இது ஓர் எதிர்பார்த்த சம்பவமாகவும், உடலுக்கேற் படும் வெறுந் தற்செயலாக ஆகாமலும், ஆக இவ்வாறெல்லாம் கூறப்படும் ஸ்ரீ அரவிந்தருக்கு, திசம்பர் ரு ஓர் நாள் அதிகாலை யில் ஏற்பட்ட நிகழ்ச்சி நிரூபிக்கச் செல்லுகிறது. ஆனால் அவ் வினவுக்கு இன்னும் விடையளிக்க வேண்டியிருக்கிறது. அந்த ஆபத்தான சோதனையின் காரணம் என்னவாக இருக்கலாம்? வெறும் மனத்தால்மட்டும் சொல்லப்படும் விடை முற்றிலும் திருப்தியாக இருக்குமா என்பது ஐயப்பாடாக இருக்கிறது. ஒன் றையுமே முயற்சிக்கக்கூடாதெனப்படுகிறது. இன்னும் ஸ்ரீ அரவிந் தர் தனது பணியின் வளர்ச்சிக்கு அவசியம் வேண்டியதெனத் தான் கருதியவற்றைத் தன் எதேச்சையாக ஆற்றினர் என்ற நம் பிக்கையில் நாம் இருப்போமாக. மேலும், வருங்காலத்தில் அப் பூர்ணயோக உண்மை விளைவுகளை ஸ்ரீ அரவிந்தரோடு பங்கெடுத்துக் கொண்ட அன்னையிடம் இயமானரின் திருவுளத்தின் உன்னத பண்பினை விரிவாகக் கூறும் பொருட்டு ஒப்படைப்போமாக. இருப் பினும், இயமானர்கூட, ஆன்மாவின் பல்வேறு செயலினை உண ரும் மன முயற்சிகளை அறவே தவிர்க்கும்படி ஓர்போதுங் கூறிலர்.

பிரத்தியட்சமாக உள்ளத்தில் உதிக்கும் ஞானத்தைச் சொல்வன் மையால் உருவாக்கல் அல்லது அறிவரியதை நுண்மான் புலனெடு பற்றல் என்பதை ஓம்பினர். அவருக்கே சொந்தமான ஒளிமிக்க ஆன்ம தத்துவ சம்பந்தத்தால் ஸ்ரீ அரவிந்தரின் அதிமானசத் தின் இஷ்டத்தை மனக்கண்ணளவால் நாம் பற்றுவோமாயின், அவர் நமது புறக்கண்களுக்கப்பாலிருந்து எதனை மறுக்காரோ அதனை நிறைவேற்றியவர்களாவோம். ஸ்ரீ அரவிந்தரின் யோக மும் ஆன்ம தத்துவமும் ஆயவற்றின் சாரமாவது அதிமானசம் எனப்படும் ஆற்றல் நிறைந்த " சித்தபஸ்" ஸேயாம். "சித்-தபஸ்" என்றால் இறைமையின் நிலையினையும் ஆற்றலையுமே குறிக்கும். அதாவது ஒரே சமயத்தில் பலவாய் இருக்கவல்ல திரு விளையாட்டின் வெளிவரா சக்திகள் பொருந்த, தெய்வத்தின் ஒப் பற்ற அதீதத்தைத் தானுயிருத்தல்—தானே ஆதல்—ஆய பரி பூரணப் பொலிவுக்குக் கொணர்கிற தென்பதேயாம். இப்பொலி வானது முழு ஐக்கியமாகும். அங்கே படைக்கவல்ல உண்மைகள், பழுதற்ற மூலப்பொருள்கள், இவ்வுலகில் பக்குவமுறுதிருக்கும் எல்லாப் பொருள்களின் மூலரூபங்கள் முதலியன தோன்றித் தொழில் புரிகின்றன. மேலும் அவ்விடத்தே தான், சடப்பொருள் உயிராற்றல், மனம் ஆயவற்றின் கடினமான பரிணாமத்தினைக் கடவுள் வைத்திருக்கிறார். கடந்தொளிரும் தனிப்பொருளுக்குற்ற பாதாள முனையாக அவரால் ஆக்கப்பட்ட மூல இருளின் பெரிய மறதியினின்றும் ஜீவர்கள் உய்யும் வண்ணம் வெளிவரும் தனது ஆதரவால் அவற்றைத் தாங்குகிறார். இரு முனைகளுக்கிடை யேயும் படிப்படியாய் வளர்ந்தேகும். இப்புவிக்கு மேலும், அதி மானசத்தின் மூலமூர்த்தியின் கீழும் பற்பல மர்மத்தலங்கள் உள. அவை, ஜடநுட்பம், பலம், மனம், மனங்கடந்த நிலை முதலிய னவாம். மேற்கூறியவற்றுள் முன் மூன்றின் பின்னால் இதயம் உளது. அவ்வவற்றின் உண்மைப் பொருள்களோடும் இயக்கங் களோடும் இருந்து ஒன்றோடொன்று சிக்கலாகக் கூடிக் கலக் கின்ற முறைமையும் அங்கே உண்டு. இவையனைத்தும், பொது வாகப் பழைய ஞானிகளுக்குத் தெரியும்.

அவர்கள் சிற்றறிவுள்ள மனிதனிடத்தில் காரண சரீரம், நுட்ப உடல், தூல உடல் என்றழைக்கப்படுகின்ற மூன்று சடப்போர்வைகள் இருக்கின்ற உண்மையினை உறுதிப்படுத்தினர். அதிமான சத்தின் உருவே, கடைசியாக கூறப்பட்ட காரண சரீரமாகும். பேரறிவின் ஆக்க ஒளியின் தொகுப்பே அது. எல்லையற்ற அழிவற்ற ஆனந்தமும் ஆற்றலும் அதே. பரிபூரண சித்தியின் முழுவிளக்கமான காரண சரீரமாக ஆக்கி அதன் பயனுக உலகப் பொருள்கள் யாவும் ஆழ்ந்தகன்றுயர்ந்துள பரம்பொருட்கண் விளக்கமுறுந் தன்மைகளாக (பண்புகளாக) மட்டும் ஆகாது, இப்புவிமீதும் நித்தியமாக இருக்க ஆக்கப்படலாம். ஆழ்ந்தகன்றுயர்ந்துள்ள இறையாற்றல்களை முடிவாக மண்ணளவுக்கு யாவருங் கொணரக்கூடும். ஆன்மாவினைப் பிறப்புக்கப்பால் உள்ள நிலைத்த அறிவினின்றெழும் ஆழ்ந்தகன்றுயர்ந்த கூரிய உணர்வுகளின் பீடமான அதிமானசமாக ஆக்கலாம். இவ்வாறெல்லாம் செய்ய உதவும் இவ்வுலகப் போக்கினை பண்டைப் பெரியார்கள் அறிந்திலர். சுருங்கக் கூறின், அதிமானச நோக்கம் ஆற்றல் ஆயவற்றை முற்றிலும் முறைப்படப் பெறுவதில் அவர்கள் பிற்பட்டனர். அதிமானச ஒளியினை அந்தராத்மாவிற் கலந்து அதனை மனம் உயிர் இன்னுங் கூறின், உடம்பினுள்ளுங் கலந்து அவற்றை உருமாற்றித் தெய்வ நிலையாக்கல்தான் ஸ்ரீ அரவிந்தரின் யோகமும் அரியதாகக் கண்டு பிடித்தப் பொருளுமாகும்.

அதிமானச ஒளிப்பொலிவின் பரப்பால் ஸ்ரீ அரவிந்தர் ஓர் புதிய உலகினையே காணக் கருதினர். மேலும், ஒவ்வொரு நிலையினும், இறைமய வாழ்வே வாழவும் உண்மையில் ஆன்ம வளர்ச்சியின் முடிவான நிலையாக இருக்கவும் கருதினர். அத்துடன், அதே நோக்கில், தான் படைத்த புது உலகிற்குத் தனது அதிமானச நெறியானும் அன்னை வாயிலாகவும் இரு இதயங்களைக் கற்பிக்கும் ஓர் வகுப்பினைப் பெறச் சென்றனர்.

அதிமானசமாதலாவது, தனது முடிந்த தத்துவங்களுக்கிடையில், நோயினின்றும் விடுபட்டிருத்தல், வேண்டியவரை வாழ்

நாளை நீடிக்கச் செய்தல், உடம்பின் வேலைகளில் ஓர் மாறுதல் ஆயவற்றை அடக்கி நிற்கிறது. உண்மையில், இவையாவும்,மனித உருவில் வெளிப்படுகின்ற இறை இயல்பின் புறத்தோற்ற விளக்க மாக இருக்குமே அல்லாது உள்ளுறை ஆணவத்தினை வெளிமுக மாக அதிகப்படுத்திக்கொண்டு வருகின்ற முறையில் அல்ல. அதி மானச உலக இருப்புக்கு முழு பாதுகாப்பளிக்க இன்றியமையா திருக்கும் இந்த முதிர்ந்த தத்துவங்களைக் கையாள வேண்டி யோகி ஸ்ரீ அரவிந்தர் அதோ முகப்பட்டுறைகின்ற இறைமையின் அடிப்படை இருளான அஞதி மறப்பின் அஸ்திவாரத்தை முடி வாக அசைக்கவேண்டியதாயிற்று. அவ்வஞதி மறப்பினின்றுமே பரிணமம் எழுவதாகத் தென்படுகிறது. ஸ்ரீ அரவிந்தரும் அன்னை யும் தொன்றுதொட்டு மனித இயற்கை முழுமைக்கும் வரும் இன் னல்களைத் தம்மீது ஏற்றுக்கொண்டு ஆரம்பக்கர்த்த பிரதிநிதிகள் போற் சென்ற பத்தோடைந்தாண்டுகளாக இப்பாறையைத் தாக் கிய வண்ணம் இருந்தனர். ஸ்ரீ அரவிந்தர் தமது சீடர் ஒருவர்க்கு 1936 ல் எழுதியதாவது :—" நான் இன்ப உலகச்சிந்தனையாகவே இருப்பதாக எண்ணுதே. அப்படியிருந்தால் நல்லதுதான். ஆனல் அதற்குமாருக இன்னல்களோடு உழல நேரிடுகிறது. சுவர்க்கம்— பாதாளம் இரண்டினிடையே ஓர் அணைகோலும் பொருட்டு, பாதாளத்தில் நான் ஆழவேண்டியதாகிறது. இருப்பினும் அதுவுங் கூட எனது பணிக்குத் தேவை. அதனை எவருஞ் சந்தித்தே தீர வேண்டும்." என்பதே. இவ்வாறு மூழ்கும்போது அம்மர்மமான மறப்பின் திரைகள் ஒவ்வொன்முக அறுத்தகற்றப்பட்டு அத னுள்ளே அதிமானச ஒளியினைக் கொணர முயலப்பட்டது. பல் வேறுப் விளையக்கூடிய நிகழ்ச்சிகள் எழுகின்றன. மேலும் பெரிய மனப்பண்புகளும், மிகக்கொடிய தேக இறுக்கங்களும் பொறுக்க வேண்டி யிருக்கின்றன. ஆனல் போராட்டத்தின் முற்றிலும் அதி மானசத் தலைவர் விதியின் தாக்கலை நீக்கக்கூடியது போன்ற சஞ் சீவியை ஏந்திச் செல்கிருர். தனதுடலகத்தே விளங்கும் ஒளியின் பெருக்கமிருந்துங்கூட பெருஞ்சோதனைகளுக்குள்ளானுர். மேலும் முடிவில் ஓர் வெற்றியாளனுக வெளிவர ஆற்றலுமுடையவர். தன்னைப் பின்பற்றும் மக்கள் முடிவில் வெற்றியுறும் பாதைக்கு

வெளிச்சம் காட்டுவர். அவ்வாறு வெளிவருதலே ஸ்ரீ அரவிந்த ரின் திட்டமாம். அவரது சொந்த கடிதங்களையும் ஆன்மார்த்தக் கட்டுரைகளையும் நோக்குமிடத்து மேலே கூறிய திட்டம் புலனாகிறது. 1935ல் எழுதிய ஓர் கடிதத்தில் அத்திட்டமும் ஆணவமற்ற உல களவு விரிந்த அவதார புருஷனின் உளப்பான்மையும் தொனிக் கின்றன. அதாவது : "நான் எனக்கென ஒன்றும் செய்து கொண்டிருக்கவில்லை. விடுதலையாம் மோட்சத்தும் அதிமானசப் பெருக்கத்தும் எனக்கெனத் தனித்த தேவையே கிடையாது. நான் அதிமானசத்தைப் பெருக்குவதில் தொடர்ந்து செல்கிறேன் என் பது உலகறிவுக்குச் செய்யப்படவேண்டிய செயலாக அது இருக் கிறது. மேலும் அதனை என்னிடத்தேயே செய்யப்படாவிடின் பிறர் பால் செய்ய இயலாது" என்பதே.

ஆதலின் ஸ்ரீ அரவிந்தர் தனது வெளியிட்ட அறிக்கைகளு டன், தானும் அன்னையுங் கலந்து, அதிமானச உலகினை ஆக்கும் ஆரம்பநிலைக்குற்ற தேவையும் பொருளும் நாடினவராகக் காணப் படுகின்றனர். இருப்பினும் அந்த அறிக்கைகளிலேயே, ஓர் சிறி தளவு வேறுவிதமாக முடியுமெனக் காட்டுகிறார். 1934-ம் ஆண் டுற்ற ஓர் கடிதம் கடவுளின் அருளுக்குப் பாத்திரமாகும் வழிகளைப் பற்றிப் பொதுவாகக் கூறுகிறது." கீழுலகலீலை, மறுமை, மே லுண்மை இவற்றின் அறிவுக்கொத்தவாறு இறை இயங்குகிறது. அவ்விறை இதைத்தான் செய்யவேண்டும் ; இதைச் செய்யக் கூடாது, எனவரும் மக்களின் கருத்துகளுக் கிணங்காது, லீலை யின் தேவைக் கிணங்கவே இயங்கும்." என்பதேயாகும். இறை மையின் செயல்களில் ஏற்படும் எதிர்பாராத மாறுதல்களைப்பற் றிய தெளிவான குறிப்புகள் 1935-ம் ஆண்டுள்ள கடிதம் ஒன் றில் உள. அதாவது :—" ஏன், இறைமை தனது செயல்கள் யாவுள்ளும் வெற்றிபெற்றுக வேண்டுமெனக் கட்டுப்படவேண்டும் ? முடிவான கொள்கைக்கு வெற்றியைக்காட்டிலும் தோல்வியானது துணையாயிருந்து ஏன் பயன்படக்கூடாது ? இறையைப்பற்றிய இவ் வெண்ணங்கள் யாவும் எவ்வளவு ஆரம்பத்திலேயே திருந்தா தனவாகவும் கடினமாகவும் இருக்கின்றன." என்பவைகளாம்.

இறைமையின் உன்னத முடிவுக்குமுன் ஏற்படும் வெளிப்பார் வைக்குத் தோல்வியெனத் தோன்றுவதுங்கூட மறைமுக வெற்றி யாகலாம். முரண்பட்ட தந்திர அறிவின் தீவிர வேகந்தோய்ந்த வழியினுல் சரியாக அம்முடிவினை அடையக்கூடும். மேலும்,மேற் பார்வைக்கு அவர் மூத்திர அடைப்பால் மாய்ந்ததை நோக்கும் போது, ஸ்ரீ அரவிந்தர் நியமித்த எல்லாவற்றையும் ஆராயும் போது, உண்மையில் அந்த தீவிர தந்திர அறிவினைப் பின்பற்றி யதை எடுத்துக்காட்டவே ஆகுமென்க.

ஆன்மார்த்த ஞானத்தர் ஒருவராலும் ஏற்கனவே என்றுமே எதிர்த்துப் போராடப்பட்டிராத எதிர்ப்புகளைத் தாக்கும் ஓர் தள கர்த்தனின் படையைப்போன்று உண்மையில் அதிமானச யோக முழுதும் இருந்தது. ஒவ்வோர் சாதாரண அனுபோக எதிர்ப்பி லும், சுருதி மூலம் வந்த, தொன்றுதொட்டு வருங் காலங்களெங் கும் உள்ள மனித வாழ்வின் ஒவ்வோர் தோற்றத்தெதிர்ப்பிலும் ஒவ்வோர் ஆன்ம மரபிலுங்கூட, இந்த யோகம் சடத்தின் அஸ்தி வாரத்தையே மாற்ற அவாவிற்று. மேலும், இருட்டரனுள் ஏகிற்று. ஸ்ரீ அரவிந்தரை ஒத்த அச்சமற்ற போர்வீரன் ஒருவனே, திண்ணிய ஆன்ம வீரரான அவரைப்போன்ற ஓர் மேதாவி ஒருவ ஞல் மட்டுமே பரிணுமத்தின் விளைவாம் தேவதாப்பிரசன்னத்தின் மகத்தான ரகசியத்தை ஊகித்துணரக்கூடும். மேலும், உருமாற் றுந் தன்மையுற்ற மிக ஆர்வத்தோடு பரவுந் திட்டத்தை, நிலைத்த இயற்கையின்மீது திணித்தார். 1935ல் எழுதிய மற்ருேர் கடிதத் தில் மண் உலகில் எவ்வளவு தூரம் முன் சென்ருர் என்ற செய் தியையும் அறியக்கூடும். ''அதிமானசத்தைக் கீழே கொணர நான் நாடிக்கொண்டிருப்பது சொந்த பெருமைக்கல்ல. மக்கள் கருதும் பெருமைக்கோ சிறுமைக்கோ எனக்குச் சிறிதும் அக்கறையில்லை. மனித அறிவில் ஸ்ரீ கிருஷ்ணன் எதனை முயற்சிக்கவில்லையோ அதனை நான் முயற்சித்துவருவதற்காக என்னை மடையன் எனக் கருதில் எனக்கு அதைப்பற்றிச் சிறிதும் கவலையே இல்லை. அவனே இவனே அல்லது வேறு எவனே அதில் உண்டென்பதைப் பற்றிய கேள்வியே அங்கில்லை. என்னையும் தெய்வத்தையும்

பொறுத்தது அது. இறைவன் இச்சையோ அன்றே அதிமான சத்தைக் கீழே கொணர நான் ஏவப்பட்டேனே அன்றே, அல்லது அதிமானசம் இறங்குவதற்கு ஓர் வழி கோலவோ அன்றே, கடைசியாக முன்னிலும் எளிதாகக் கைகூடச் செய்தேனே அன்றே என்பதே கேள்வி. வேண்டுமாயின் எல்லா மனிதர்களும் என்னைப் பரிகசிக்கட்டும். கூடுமாயின், நான் எதை நம்பியுள்ளேனே அதன் பொருட்டு, நரகம் புகினுஞ் சரியே, அப்போதுங்கூட, நான் வெற்றியுறும் அல்லது மாயும் வரையிலும் எனது பணியிற் செல் வேன். இந்நோக்கத்தோடுதான் நான் அதிமானசத்தினைத் தேடு கிறேன். எனது அல்லது பிறரின் பெருமை வேட்கைக்கல்ல. தன் னலமற்ற ஓர் பெரும் வீரத்தன்மை இங்கே உள்ளது. வீரயோகி யின் மிக உயிர்ப்புற்ற படம் அது. தனது குறிக்கோளுக்கருகே, செல்லுவதற்காக, ஏற்படும் ஆபத்தெதனையும் சந்திக்கத் தயார்." நான் வெல்வேன், இன்றேல் மாய்வேன்." என்பதே சட்டமாயினும் மன அமைப்பு எவ்வாறென்றல் " வெல்லவே மாய்கிறேன் " என்ற மிக அரிய திடசித்த சட்டத்தைச் சுலபமாக விரும்பிய மனப்பான்மை இருந்தது. மறப்பின் இருண்ட சக்திக ளின் கடைசி பிடிப்பில் அதிமானசம் நிறைந்த கண்ணிய உடம் பினை மாய்விப்பதால் சக்திகளை, அளவு மீறி, தளர்த்தியும், பொன்னொத்த மேலாம் இறைமையினைப் பூமிக்குப் பெருவாரி யாக இறக்கியும் அதிமானச யோக சம்பந்தனை எனது உடம் பகத்துத் தேக்கிக்கொள்ளவும் உதவுகின்ற கருத்தினையே நான் மேற்கூறிய இத்திட்டத்தைப் போற்றுவதற்காக வேண்டப்படுகிறது. அந்த மாப்பெரும் பொருள் விளக்கந் தோன்றினல், பெருந்தள கர்த்தனக ஏற்கனவே அவர் இருந்தமையினல், ஸ்ரீ அரவிந்தர் தமது போர்த்திட்ட முழுமையும் மாற்றியமைக்கத் தயாராக இருப் பார். ஆண்டு, ஏற்கனவே, தாம் தயாரித்த அரண்களின் வரிசை முற்றையும் கைவிடத் தயாராயிருப்பர். முற்போக உதவும் தொன் னெறியை விடுவர். திடீரெனத் தனது திடசித்தப் போக்கின் திசையை மாற்றுவர். ஒவ்வோர் பகுதியினும் தனது சடத்துவ இருப்பினை அதிமானசமாக்கும் முயற்சிக்குப்பதிலாக ஏதோ ஓர் அகண்டாகார மறைவிடத்திற்கு யாதோர் நடுக்கின்றி ஏகுவர். அதி

மானசம் தனக்களித்த அந்த காவலேயே எறிவர். வெளிமுகமாக யாவற்றையும் இழந்தவராகியும் ரகசியத்தில் எவற்றையும் வெல்ல போராடிக்கொண்டே செல்வர்.

அன்னையின் சடத்துவ உருமாற்றத்தை அளவுகடந்து துரிதப் படுத்தவும் முற்றிலுமே பந்தோபஸ்தாகச் செய்யவும் வேண்டியே இத்தகைய யுக்தியுற்ற மிகப் பெரிய பலியேற்பட்டதே யன்றி வேறல்ல. அதன் மூலம் குவலயத்தில் மக்கள் தொகுதிக்கே ஓர் தெய்வ வாழ்வினை நிலைநாட்டி ஓங்கச் செய்யவும் வேண்டியதா யிற்று. இதலல்லால் வேறெதாலும் ஸ்ரீ அரவிந்தர் காலமானதை எடுத்து விளக்கமுடியாது. 1934 ஆம் ஆண்டளவுச் சென்று ஸ்ரீ அரவிந்தர் ஓர் கடிதத்தில் ஊழித்தீச் சேதத்தினின்றும் உலகைக் காக்கும் இனிய செயலின் சக்தியைப்பற்றித் தெரிவித்திருப்பதும் ஊகிக்கப்படலாம். அதாவது :—" நான் சுமக்கவேண்டியதைத் தெய்வத்திருவருள் மட்டுமே தாங்கக்கூடும். உலகினை அதன் இரு ளினின்றும் இறைமைக்கு எடுத்துச் செல்லும் ஒரே நோக்கத்துடன் எல்லாவற்றையும் இழந்தவர்கள் எவரேனும் அவர்கள் சுமக்கும் பளுவினையும் அதுவே தாங்கும்." என்பதே. இந்த ஓர் மனித னின் உடம்புக்குள் அம்மிகக்கொடிய விஷம் இழுத்தடக்கப்படா திருந்தால், கனுவிலுங் காணற்கரிய பெரிய நாசம் உலகினைச் சூழ்ந்திருக்கும் என்றுகூட நாம் கூறலாம். அவரது ஆன்மஅறிவு இறையருளால் புரக்கப்பட்டதால் உருவிட்டுருப்பாயும் ஆற்றலின் அவதாரமாக உலகப் பிரசித்திபெற்ற ஒப்பற்ற புருஷராக இருக்க நேர்ந்தது. ஸ்ரீ அரவிந்தருக்குத் தனது யோகத்தில் இடையூறளித்த அல்லல்கள் உண்மையில் அவரைச் சார்ந்தனவல்ல என்ற உண் மையை மீண்டும் நாம் இங்கே எடுத்துக்காட்டலாம். அவைகள் பரம்பரையின் பிரதிநிதிகள். மேலும் அவற்றின் தாமதப்படுத்தும் ஆபத்தான சுமையைத் தனக்குற்ற சிரேஷ்ட வாய்ப்புகளும் ஆற் றல்களும் இருந்துங்கூடவோ அல்லது அவை காரணமாகவோ என்னவோ அவர் சந்தோஷமாக அதனை ஒத்துக்கொண்டார். பல ஆண்டுகளுக்குமுன் அன்னையின் உடம்பில் ஏற்பட்ட தற்காலிக உபாதியைப்பற்றி எழுந்த வினவுக்கு அவர் எழுதியதாவது :—

" நாங்கள் எங்களுக்கெனத் தனித்துச் சித்தியைத் தேடவில்லை. ஆனுல் பொதுமாறுதலின் அறிகுறியாக பிறர்களுக்கெனச் சித்தியை வழங்கத் தேடினேம். அநுபவமும் ரூபாந்தரமும் பெறுங்கால் வந்துறும் இன்னல்களை யேற்று எதிர்த்து நாங்களே அவற்றை வெல்லாவிடின் அதைச் செய்திருக்க முடியாது. போதிய அளவு இதரத் தலங்களில் செய்யப்பட்டிருக்கிறது. ஆயினும், மிகப் பருத்தத் தூலப்பொருளில் இன்னும் அவ்வளவு செய்யப் படவில்லை. அது ஆகும் வரை, போராட்டம் தொடரும். அன்னையின் இன்னல்கள் அவருக்கே உரித்தல்ல. ரூபாந்தர வேலையிலும் பொதுப்பணியின் உள்ளும் ஏற்படும் கஷ்டங்களுடன் பிறரது இன்னல்களையும் அவர் தாங்குகின்ருர். வேறு விதமாக இருந்திருந்தால் அது வேறு செய்தி." என்பதே. எனவே ஸ்ரீ அரவிந்தர் அல்லது அன்னை இவர்களால் செய்யப்படும் எவ்விதத் தியாகமும் சொந்த குறைபாடுகளால் ஆனவை என்று அவர்கள்மேல் சுமத்துவதற்கில்லை. அவர்களது ஒப்பற்ற ஆதாரங்கள் தத்தமக்கே விடப்படுமாயின், அவை ஒவ்வொரு தடையினையுந் தாண்டிசசெல்லும். ஸ்ரீ அரவிந்தர் மறைந்த இப்போதைய கேள்வியைக் கொண்டே அவரிடத்துற்ற குறைபாடுகளுள் ஏதோ சில காரணத்தால் இறப்பை அவர் பெற்றுச்செல்ல நேர்ந்ததென சொல்வதற்கில்லை. சதா பரிணமிக்கும் உலக அறிவின் பெரிய தத்து—தெய்வத்தாக்குற்ற அசேதனத்தினின்று எழுந்து எதிர்த்துத் திகைக்க வைக்கும் எழுச்சியாக இருக்கலாம். மேலும் அதனை மூத்திர அடைப்பின் வழியாக உடம்பினையே மாய்க்கவல்ல, எதேச்சையான (தலை சிறந்த) யுக்தியாக்கி அவரது சொந்த உயிரின்மீதே முனைத்துச் செலுத்தப்பட்டதாகவும் இருக்கலாம். எப்படியாயினுஞ் சதுரரான இயமானரால், தான் மேற்கொண்டுள்ள தொண்டின் மர்ம உதவிக்காக அது உபயோகிக்கப்பட்டது. நேரே தனது சொந்த சித்தியைக்காட்டிலும் அவருக்குப் பணிதான் எப்போதும் மிகவும் முதன்மையாக இருந்தது.

ஆனுல், அது, யுக்தி தியாகம் இவற்றின் சாரமாகவும் இருந்திருக்கும். அகன்ற அமைதியான ஆமோதிப்புடன் வலுவாய்

மறுத்த எதிர்ப்பு இருந்ததைக் கவனித்தால் அது ஸ்ரீ அரவிந்தரின் தனித்த பண்பென்றே சொல்லலாம். ஆதலால்தான் நாம் ஸ்ரீ அரவிந்தர் கீழிறங்கிப் போரிடச் சென்றுளார் என்று சொல்லலாஞேம். உலக இயல்பின் எக்குறையினையும் ஓர்போதும் சம்மதியாமைதான் அவரது குறிக்கோள். ஏன் என்ருல், வெளிப்பார்வைக்கு எது முடியாதெனத் தென்படுகிறதோ அதுவே உலக இயலில் தோன்றவேண்டிய பரிணும ரகசியமெனவும், வெளிக்குத் தடுமாறுவதுபோலத் தோன்றும் அறிவிலும், நிலையாத உடலிலும், இடறும் உயிராற்றலிலும் எல்லாவற்றையும் முழுமைப்படுத்தும் அதிமானச விளக்கம் உண்டெனவும், மிருகத்தன்மையாகக காணப்படும் விலங்கறிவினின்று மனமும் பகுத்தறிவும் வெளிவந்து மிளிருமெனவும், உயிரற்றதாகத் தென்படும் சடப்பொருளில் ஜீவசத்தியும் உணர்ச்சியும் சிலிர்த்தெழுமெனவுங் கண்டார்.

ஆதலால் சாதாரண உலகநிலைகளுக்கு ஈடுபடுதலோ அல்லது உலகம் நீத்து சாந்திக்காக விரைதலோ ஸ்ரீ அரவிந்தருக்கு ஓர் போதும் ஏற்படாது. பரோடாவில் 1908-ம் ஆண்டில் நிகழ்ந்த ஒப்பற்ற மூன்று தினங்கள் முதற்கொண்டே, மாசற்ற காலாதீதமான சாந்தம் இத்தன்மையதென அவருக்கு நிலைத்த அநுபவமாயிற்று. அந்நாட்களில் இதர பல்வேறு யோகங்களின் முடிவாக இருந்துவருகின்ற நிர்வாண இயல்பின் முழு அநுபவத்தை, மனத்தை முற்றிலும் நிச்சலமாக்கிப் பெற்ருர். ஆனல் அதுவே அவருக்கு முடிவாகாமல், அடுத்துவரும் வெற்றிகளுக்குத் தக்க அஸ்திவாரமாயது. ஈடுபடுதல் என்ருல் தெய்வம் தவிர வேறெதற்கும் அவர் சரண் புகார். அதற்காகத் தனது கடைசி மூச்சுள்ள வரைக்கும் அதிமானச இறக்கத்திற்காக அவர் அரும்பாடுபட்டார். அதிமானச வெளிச்சத்திஞல் தனது பூதவுடலை ஆர்வத்தோடு மூடிக்கொண்டு அழியாத ஆன்மக்கதிரவனை உள்நோக்கிப் பிரகாசிக்க அழைத்தார். அதன் பயஞகத்தான் தனது பூதவுடல் நிற மாறுதல், அழிதல் ஆயவற்றின் குறியின்றிச் சிலதினங்கள் வரையிலும் உயிர் நீத்தும் வைத்திருக்க முடிந்தது. தேகம் விடும் அத்தருணத்தில் அவ்வாறு சமாளித்தல் என்பது தனது வாழ்நாள்

முழுமையும் செய்த முயற்சியோடு ஒத்திருந்தது. தோல்வியாகத் தென்பட்ட அந்த நேரத்தில் அவர் எழுதிய ஓர் கடிதத்தில் தாம் பெறப்போகும் வெற்றியின் முறையை அவரே விளக்கி யிருக்க வில்லையா ? அதாவது :—" இப்போது மாறுன பயனைப் பெறக் கூடுமென நான் முன்கூட்டி யறியினும், அது எதுவாக இருக்க வேண்டுமென நினைக்கின்றேனே அதற்காக நான் உழைத்தாக வேண்டும். ஏன் என்றால் நான் உழைக்கும் உண்மையின் தத்து வம் ஆற்றல் இவற்றை அவ்வுழைப்பு எப்போதுந் தளரவிடாமல் வைத்திருக்கிறது. மேலும் இப்போதைய விதி மாறுக இருப்பி னும், இனிவரும் எதிர்கால நிலைக்கு அனுகூலமாம்படி அது துணை செய்கிறது "—என்பதே.

இயமானரின் தூரதிருஷ்டியுற்ற இச்சொற்றொடர்களால், இருபது ஆண்டுகளுக்குமேலும், மிகவரிய உலகத்தொண்டுக்காகத் தங்கி வந்த தமது எளிய படுக்கை அறையில், திசம்பர் மீ 5-ம் தேதி அதிகாலையிலிருந்து 111 மணி நேரத்திற்குமேலாகவே கண் ணியமான தியானக்கண்ணுடன் கிடந்த ரகசியத்தைச் சிறிது விளக் குவான் முற்பட்ட நமது முயற்சியை முடித்துக்கொள்ளலாம். அவரது உடம்பின் தோற்றத்தை விவகரிக்க வேண்டுமாயின் " ஏகாதி பதியான ஆன்மார்த்தம்" என்ற ஒன்றுதான் அமையும்.

பரந்த நெற்றிக்குமேலே பறந்துகொண்டிருந்த வெண்கூந் தலும், வெண்தாடியும் பெற்ற வீர முகவடிவும், மூடிய அமைதி யான கண்களும், அகன்ற வாய்ப்புறங்களைப்பெற்ற வளைந்த மூக் கும், அழகு வாய்ந்த ஓரங்களையுடைய வாய் இதழ்களும், அகன்ற மெல்லிய தோட்களும், வெல்லற்கரிய மார்பின்மீது வளைத்துவைக் கப்பட்ட மிருதுவும் அழகுமான ஆற்றலுள்ள கரத்தின் இனிமை யும், பொற்சரிகைக்கரை நெய்த நிறைந்த பட்டாடையால் மூடப் பட்ட வலிய வீரமான இடுப்பும், அடிக்கடி பூமியை உரிமையாக்கிக் கொண்டும் அதனை ஆசீர்வதித்துக்கொண்டும் சென்ற 79 ஆண்டு களாக நிலவிய தெய்வத்திருவடிகளின் அரசனைய, புனிதப்

பொலிவை விளக்குவன போன்று நீள கிடத்தப்பட்ட கால்களும் நற்காட்சியை நல்கின.

அறையைச் சுற்றிலும், புனிதமாக்கி மிளிரச்செய்யும் ஓர் தெய்வசக்தி உலாவிக்கொண்டிருந்தது. அவ்வாற்றல் இயமானரின் வெற்றி நிறைந்த ஓய்வான நிலையிலிருந்து கிளம்புவபோல் தோன்றிப் பார்க்கவந்தோர்களின் உடல்களைப் பாய்ந்து பற்றித் தீவிரத்தாக்கலோடு உண்டாகும் உணர்ச்சியைப்போல், அவர்களின் சிரங்களில் வீசியது. அது எவ்வாறு இருந்ததெனில் ஸ்ரீ அரவிந்தரின் தன்னலமற்ற உடம்பின் நீக்கத்தினுல் ஏற்பட்ட இரட்டிப்பான சக்தியோடு மக்கள் சமுதாய வாழ்வையே மாற்றியமைக்கவல்ல விதத்தில் அதிமானசத்தின் அருள் அங்கே வீழ்ந்தவண்ணம் அன்று புலப்பட்டது.

எவ்வாறோ ஸ்ரீ அரவிந்தரின் சொந்த சந்நிதியானது முறைப் படத் தீவிரமாக வளர்ந்ததென்றே நாம் சொல்லலாம். நாடற்கரிய ஆனந்தம், அதன் செயற் பண்புகள் உற்ற ரூபாந்தரமான தனது யோக முறையை உண்முகப் பதிவுடன் துரிதப்படுத்துவதற்காக அவர் நீண்டகாலம் ஓர் அறைக்குள் தங்கியிருந்தார். அவற்றின் பயனே அன்னை அவர்கள் தனது உடம்புடன் ஸ்ரீ அரவிந்தரின் அருகே நெருங்கிப் பழகிவந்த காரணத்தால் சீடர்களுக்கெல்லாம் வழங்கிய வண்ணம் இருக்க நேர்ந்தது.

அப்பெற்றியோர், தனது புறக்கோசத்தை ஒதுக்கிவைத்துத் தனது குழுவினர்களுடன் புதிய நெருங்கிய உறவு பூண்டு தனது எல்லையற்ற இருப்பின்கண் அவர்கள் யாவரையும் மிகவும் நேராக ஏற்றுக்கொண்டார். பரவும் பெருமைமட்டும் அது உடையதென நாம் நினைத்தால், அந்நினைப்பு அவ்விருப்புக்குற்ற நியாயத்தை ஓர் சிறிதும் அளிக்காது.

தூலக்கோசத்திற்குப்பின் இதர முறையுடன் வகுக்கப்பட்ட கோசங்கள் சூட்சுமமானதும் காரண சரீரமானதுமாக இருக்கின்றன. மேலும் ஸ்ரீ அரவிந்தரோ தொலைவிட்டுக் கிடந்த காரணப்

பொருள்களை எல்லாம் பயன்படும் வண்ணம் அண்மையிலுள்ள நுட்ப உடலுக்குக் கொணர்ந்து அங்கிருந்து குறிப்புடன் செய்த தியாக வேளையில் அவரது தூலசரீரத்திற்கு வரும்வரை அவற்றை நெருக்கிக்கொண்டிருந்தார். "இதரத் தலங்களில் ரூபாந்தர வேலை போதிய அளவு செய்யப்பட்டிருக்கிறது." என்பது அவர் மொழி. இதன் பொருளாவது :—அவர் தமது சூட்சும சரீரத்தில் அதிமானசத்தை உருக்கொடுத்து வைத் திருந்தார் என்றும், ஆன்மா இளைப்பாறுமிடஞ் சென்று புதிய நுட்ப உடலோடு ஓர் புதிய தூலத்தேகத்தோடு மீண்டும் பிறப்பேற் றுத் திரும்புவதற்காகத்தான் எவ்வித நுட்பமான இயற்கையின் ஆட்சிக்குட்படவில்லை என்றும் சொல்லக்கூடும். ஸ்ரீ அரவிந்தர் தனது தூலத்தை விட்டு விலகுந்தருவாயில், தனது அதிமானச யோகமானது தான் அவதரித்த உருவைக்கொண்டு விஸ்வமும் விஸ்வாதீதமாகவும் செய்வித்த புருஷரைக்காட்டிலும் பன்மடங்கு செய்யுநிலையில் இருந்தார். ஏக காலத்தில் தெய்வமாகவும் மனித னுகவும் கரையாத நுட்ப உடலோடு இயங்கும் அப்புருஷராகவே அவர் உண்மையிலிருந்து இவ்வுடலோடு அடிக்கடி, அதிகமாக, நேருக்குநேர் சம்பந்தம் பெறக்கூடும். அவ்வாறுயின் பழயகாலத் திய சித்தர்கள் கூறிய இருடிகள், தீர்க்கதரிசிகள், அவதாரபுரு ஷர்கள் இவர்களைக் காட்டிலும் எவ்வளவோ, அதிகமாக இம்மண் ணுலகோடு ஸ்ரீ அரவிந்தர் உறவாடுகிருர் எனலாம். எனவே ஸ்ரீ அரவிந்தர் மிகவுஞ் சிறப்பித்துக் கூறுமிடத்து, வியக்கத்தக்கவாறு திறனுற்ற அருள் நிறைந்த புருஷர்தான். அன்னேர் நம் குரு வாவர். மேலும் யாரை நாம் நேசித்தோமோ அன்னேர் இன்றும் நிலவுகிருர் என்பதற்கறிகுறியாக உருவுற்ற உண்மையானது அன்னையாரால் பின்வருமாறு நவிலப்பட்டுளது :—"நம்முடன் இருப்பதை உணர்ந்த வண்ணம் இங்கே உயிருடன் இருக்கும் ஸ்ரீ அரவிந்தரைப்பற்றித் துக்கித்தல் அவரைத் தூஷிப்பதாம்." என்பதே.

அதே உறுதியான உண்மை திசம்பர் மீ 7-ம் தேதி உற்ற நல்ல செய்தியில் வைரக்கற்கள் போல் பதிக்கப் பட்டிருக்கிறது.

தானும் ஸ்ரீ அரவிந்தரும் ஒன்றே என்ற அச்செய்தியினைத் தனது ஆழ்ந்த உள்ளத்தினின்றும் வெளியிட்டார். அதாவது :— "பெரும, துணை செய்து பிரகாசிப்பிக்கும் அறிவுமயமாக மட்டுமல்லாது செயலில் சக்தி வாய்ந்த மூர்த்தியாகவும் நின்று இன்று காலை, தங்கள் பணி நிறைவேறும்வரைத் தாங்கள் எங்க ளுடன் வதிவீர் என்ற உறுதியை எனக்குக் கொடுத்தீர். ஐயந்திரி பற்ற மொழிகளில் தங்களுக்குற்ற யாவும் இங்கேயே இருக்கு மென்றும் உலகம் ரூபாந்தரமடையும்வரை உலகச் சூழ்நிலையை விட்டகலமாட்டீரென்றும் தாங்கள் வாக்களித்தீர். அம்மாணிய தோன்றுத்துணையை உணரும் பக்குவிகளாக நாங்கள் இருக்க அருள்வீராக. மேலும், இனிமேல், எங்கள் மாட்டுற்ற ஒவ்வொன் றையும் தங்கள் பிரசன்னத்தொண்டின் முடிவுக்கே வரவர முழு மையும் அடைக்கலப்படுத்தும் அந்த ஒரே நோக்கத்திற்கு நிவே தனப்படுத்தும்படி அருள்வீராக." என்பதே.

ஆதலின் நுட்ப உருவில் இயமானர் தனதருகில் இருக்க, எதிர்காலத்திற்கு அன்னையே தலைவியாக அமைய, திருப்பணி நிகழ்கிறது. மேலும், அப்பணி நிறைவேறுவதில் நம்பிக்கை உடையவர்களுக்கும் அது எவ்வாறிருக்கும் என்று அறிய வல்ல வர்களுக்கும் இதயத்தைக் குளிர்விக்கக்கூடிய சிறந்த வருங்காலக் கருவில் காணக்கூடிய ஆசை உண்டாகிறது. அதிமானச வீழ்ச்சி நமது உடலின் சதை ரத்தம் இவற்றில் பாய்ந்து முற்றுற்று நிற் கும் கால எல்லை எப்போதேற்படும் என்பது பற்றி ஸ்ரீ அரவிந்தர் தெரிவித்திருக்கிறார். அதாவது :—"நமக்காக யோக ஞானம் எடுத்தியம்புகின்ற மாதிரி நமதிருப்பில் விளங்கும் தலங்களிலும் படிப்படியாய் அமைந்த வரிசைகளிலும் சித்தர்களின் கோட்பாடு களிலும் பிராணன் தேகம் இவற்றிற்கிடையில் குறுக்கிட்டிருக்கும் நுட்ப உடற் சக்தி மட்டுமின்றி நுட்ப உடற் பொருளுங்கூட இருக் கின்றது. மேலும் அந்த நுட்ப உடற்பொருளுள் உருவங்களை உண்டு பண்ணவும் அவ்வாறு உண்டாக்கப்பட்டவற்றைப் பரிணமித்து நமது தூலத்தே புகுத்தி வெளிப்படுத்தக்கூடும் என்றும் இருக் கின்றது. அது முடிந்தே தீரவேண்டும். ஏன் எனில் இந்த நுட்ப

உடற்பொருளில் ஆய ஓர் வஸ்துவுக்குத் தனது நுட்பத்தன்மையி லிருந்து நேராகவே, மர்மசக்தியின் முறையின் துணைகொண்டு தூலப்பொருள் நிலைக்குத் தூலச்சடங்கின் உதவி யுற்றும் அல்லது அற்றுங்கூட, வருவதற்கு முடியும் என்பதும் நம்பப்பட்டிருக்கிறது. ஓர் உடலுள் புகவிரும்புகின்ற உயிருக்கோ அல்லது தனக்குத் தானே ஓர் உடம்பை அமைத்து உலகில் தெய்வ வாழ்வில் பங் கெடுத்துக்கொள்ளுகிறதற்கோ அவ்வாறு புரிய உதவப்படலாம். அதுவன்றி இப்போதைய உலகிருப்பில், ஒருவனது மனம்+தூல வுடம்பு ஆய இவற்றை வளர்த்தலில் இன்றியமையாத பலமானக் கட்டுப்பாடுகளோ எவ்விதத் தாழ்மையோ இல்லாமல் புணர்ச்சி முறையால் ஆகும் பிறப்பின் வழியே செல்லுதலுமற்று நேராகவே உருப்பெற உதவும் முறையால் ஓர் உருவம் கொடுக்கப்படலாம். ஆண்டு, அது உண்மையான தெய்வத் தூல உடம்பின் செயன் முறைகளையும், முன்னைவிட பெரிய ஆற்றல்களையும், தக்க அமைப் பினையும், உடனே ஏற்கும்.

அத்தகைய புதிய உடல் தெய்வ மயமான உலக இயல்பில், முற்றிலுமே மாறுபட்டிருக்கும். உயிரும் உருவமும் பெற்று, நாளடைவில் வளர்ந்தோங்கும் கிரமவிகாசத்தில் என்றைக்கேனும் ஓர் நாளில் வந்து தோன்றத்தான் வேண்டும்." 'என்பதேயாம்.

இவ்வார்த்தைகள் பின்வரும் உண்மையை சாதிக்கின்றன. ஏற்கனவே ஓர் தெய்வ மயமாக்கிய நுட்ப ஸ்தூலப்போர்வையைப் பெற்றுள்ள ஸ்ரீ அரவிந்தர், அன்னை துடங்கப்போகும் புதியமனித சமூகத்தினது சடத்துவப் பரப்பின்மீது முதன்மையாக விளங்கும் பொருட்டுத் தனது அதிமானசப் பொலிவுற்று விளங்கும் நெறியை அனுசரிக்கலாம். தெய்வ சம்பத்து உதயமாகும் அந்த நேரத் தில், இயல்பான வழியே பிறந்துவரும் உடம்பினூலாய வளர்ச்சி யின் மூலம் தெய்வ யாக்கையை ஆக்கித் தருவதில் அன்னையே முதன்மையானவர். அப்போது அவரது பெற்றியின் ஆதரவு மூல மாக இறை இயல்பிலிருந்து வஸ்துவும் வடிவமும் வெளிப்படுஞ்

செயலால் ரூபாந்தரத்திற்கான ஸ்தூலப் போர்வையை ஸ்ரீ அரவிந்தரே அணிய முதல்வராக ஆகலாம். ஆனால் உண்மையாகவே ஸ்ரீ அரவிந்தர் யாது செய்யப்போகிறார் என்பது பற்றி ஒன்றும் உறுதியாய்க் கூறுவதற்கில்லை. இருப்பினும் உலக வேட்கையின் புறப் பார்வைக்குக் குவலயமே அஸ்தமிப்பதுபோலத் தோன்றும் ஸ்ரீ அரவிந்தரின் காலமான நிகழ்ச்சியில் ஏற்படும், மானிடத்தன்மைக்கப்பால் விளங்குகின்ற என்றுந் தணியாத வெற்றிகரமான ஒளியானது, நாங்கள் கண்கூடாய்க் கண்ட எல்லாவற்றுடன் ஒத்திருக்கிறது.

*ஸ்ரீ அரவிந்த ஆஸ்ரம அச்சகம்,*
*புதுச்சேரி.*

A. 114/4/52/2500

இத்துடன் தமிழில் கிடைக்கும் நூல்களாவன:-

1) ஸ்ரீ அன்னையின் அமுதமொழி
2) ஸ்ரீ அரவிந்தாஸ்ரமம்

விலை ரூபாய் 1.